ஸ்ரீ:

அண்ணன் கோயில்

திருவெள்ளக்குளம் ஸ்தல புராணம்

விலை 30 பைசா

ஸ்ரீ:

அண்ணன் கோயில்

என்னும்

திருவெள்ளக்குளம் ஸ்தல புராணம்.

எழுதியவர்கள் :

ஸ்தலாசாரியர்

P. B. திருவேங்கடாசாரியார் ஸ்வாமி

P. B. அண்ணங்கராசாரியார் ஸ்வாமி

அண்ணன்கோயில்.

பிள்ளைப் பெருமாளய்யங்கார் இயற்றிய
அஷ்டப்பிரபந்தம்.

நானடிமை செய்ய விடாய் நானுனேன்
தானடிமை கொள்ளவிடாய் தானுனன்–ஆனதற்பின்
வெள்ளக்குளத்தே *விடாயிருவரும் தணிந்தோம்*
உள்ளக்குளத்தேனை யொத்து.



திரு வெள்ளக்குள வைபவம்.

ஸ்ரீ பாத்மபுராணத்திலுள்ள பலாச வன மாஹாத்மியத்தின்
பதினைந்தாவது அத்தியாயம்.

अगस्त्य :—

भूयो राजन् ! प्रवक्ष्यामि माहात्म्यं श्रीधरस्य च ।
यत् श्रुत्वातु नरः श्रीमान् मुच्यते सर्वकिल्बिषैः ॥

அகஸ்திய முனிவர் உபரிச்ரவஸு என்னும் அரசனைக் குறித்துக் கூறலானார் :—வாராய் வேந்தனே ! உனக்குச் சிரீதரனுடைய வைபவத்தைச் சொல்லுகிறேன். எவ் வைபவத்தைக் கேட்பவன் எல்லா பாபங்களிலிருந்தும் முக்தனாகக்கடவனோ அவ் வைபவத்தைக் கேட்பாயாக.

आसीत् श्वेततडाकाख्यं अस्मिन्नेव वने महत् ।
वैकुण्ठादुत्तरे भागे माधवस्य तु पश्चिमे ॥

இந்தப் பலாச வனத்திலேயே வைகுந்த விண்ணகரத்திற்கு வடக்கில், மாதவன் எழுந்தருளி இருக்கும் திருத்தேவனார் தொகையின் மேற்கில் திரு வெள்ளக்குளம் என்றதோர் பிரசித்தமான தீர்த்தம் இருக்கிறது.

तत्तडागस्य चेशान्यां महादेवो वृषध्वजः ।
ब्रह्महत्या निवृत्तस्तु ह्यद्यापि परिदृश्यते ॥
विष्णुभक्तो महाभागः सर्वसम्पत्प्रदो हरः ।

அதன் வடகிழக்குத் திசையில் பிரஹ்ம ஹத்தி-பாபத்தினின்றும் விடுபட்டுப் பரம சுத்தியடைந்தவனாய் பரம பாகவதனும் ஸகலஐஸ்வர்யங்களையும் கொடுக்கும் வன்மையுடையவனும் விருஷபத்வஜனான மகாதேவன் திருமாலை வழிப்பட்டுக் கொண்டு இன்னும் விளங்கா நிற்கிறான்.

तत्तडाकस्य पश्चाच्च मधुसूदनसंज्ञकः ।
ऐन्द्राशाभिमुखो विष्णुः सुरासुरनमस्कृतः ॥
वसत्यद्यापि राजेन्द्र ! श्रीपतिर्लोकसुन्दरः ।

அதற்கு மேற்கில் தேவ தானவர்களால் ஸேவிக்கப்படு பவனும் உலகத்தாரின் மனத்தைக்கவரும் அழகான திருமேனி யையுடையவனுமான ஸ்ரிய: பதியாய் இருக்கும் எம்பெருமான் மதுஸூதனன் என்ற திருநாமத்தோடு கிழக்குநோக்கி இன்னும் ஸேவை சாதித்துக்கொண்டு இருக்கிறுர்.

वसु :—

केनवा कारणेनास्य तडाकस्य मुनीश्वर ।
श्वेताभिधानं लोकेऽस्मिन् प्रथितं पावनं महत् ॥
तद्वदस्व महाभाग ! कृपालो कुम्भसम्भव ! ।

இவ்வாறு கூறிய அகஸ்திய முனிவரின் வார்த்தையைக்கேட்டு கந்த வஸுமன்னன் அம்முனிவரைப்பார்த்து வினவினுன் :— வாரீர் முனிபுங்கவரே ! கருணைக்கடலான அகஸ்தியமுனிவரே ! இத்தீர்த்தத்திற்குத் திரு வெள்ளக்குளம் என்று புனிதமான பெயர் ஏற்பட்ட காரணத்தைக் கருணையோடு கூறக்கடவீர்.

अगस्त्य :—

शृणु राजन् ! प्रवक्ष्यामि क्षेत्रस्यास्य तु वैभवम् ।
विकर्तनकुले जातो दुन्दुमारो महायशाः ॥

இவ்வாறு விளம்பிய வஸுமன்னவனைப்பார்த்து அகஸ்திய முனிவர் கூறலானுர்:—ஓ! அரசனே! இந்தத் திரு வெள்ளக் குள தீர்த்த க்ஷேத்திர மகிமையைக்கூறுகிறேன், கேள். முன் னொரு காலத்தில் ஸூரிய வமிசத்தில் பிறந்த துந்துமாரன் என்ற அரசன் பெரும்புகழ் பெற்று விளங்கி வந்தான்.

तस्य श्वेत इतिख्यातो पुत्रोऽभून्नव वार्षिकः ।
पुरोधसा वसिष्ठेन श्वेतस्यास्य महात्मनः ।
नवमे मृत्युरुद्दिष्टो वर्षे लोकविगर्हितः ॥

அவனுக்குச் சுவேதன் என்னும் பெயருடைய ஒரு குமாரன் இருந்தான். அந்த அரச குமாரனுக்கு ஒன்பதாவது வயதில் உலகத்தாரால் வெறுக்கத்தக்க அகாலமரணம் ஏற்படும் என்று குலகுருவான வசிஷ்ட முனிவரால் ஜாதகரீதியாக ஆராய்ந்து எடுத்துக்கூறப்பட்டது.

तच्छ्रुत्वा तु नरश्रेष्ठ! आत्मनो मृत्युकारणम् ।
नमस्कृत्य वसिष्ठं तं इतिहोवाच पार्थिवः ॥

தனக்கு ஏற்படப்போகும் அகாலமரணத்தைக்கேட்டு மனங் கலங்கியவனாய் அரசகுமாரனானசுவேதன் என்னும்அவ்வரசன் குலகுருவான வசிஷ்ட மாமுனிவரைப்பார்த்துக் கூறலானான்.

ब्रह्मपुत्र मुनिश्रेष्ठ वद मे तत्वतोऽनघ ।
केन मृत्युं जयिष्यामि तमुपायं घृणानिधे ॥

வாரீர் குலகுருவான முனிவர் பெருமானே! பிரம்ம புத்திரரும், பாப மற்றவரும் கருணைக்கடலுமான தேவரீர் அடியேனுக்கு விதிவாயிலாக வரவிருக்கும் அகால மிருத்யுவை ஜயிக்கும் உபாயத்தைக் கருணைகூர்ந்து உபதேசிக்கக்கடவீர்.

एवं तस्य वचः श्रुत्वा श्वेतस्यामिततेजसः ।
ध्यात्वा मुहूर्तमात्रं तु वसिष्ठो वाक्यमब्रवीत् ॥

மகாதேஜஸ்வியான அந்தச் சுவேதனுடைய வார்த்தையைக் கேட்டு இரக்கமுற்ற அம்மாமுனிவர் ஒரு முஹூர்த்தகாலம் தியானித்துவிட்டு அவனைப்பார்த்துக்கூறினார்.

अस्ति नागपुरं नाम सर्वक्षेत्रोत्तमोत्तमम् ।
कावेर्याश्चोत्तरे तीरे सर्वपापहरं शुभम् ॥

வாராய்! அரசனே, ஸகலக்ஷேத்திரங்களிலும் மிகச்சிறந்ததான நாகபுரம் (திருநாங்கூர்) என்றொரு க்ஷேத்திரம் இருக்கிறது. திருக்காவேரியின் வடகரையிலிருக்கும் இந்த க்ஷேத்திரம் எல்லா பாபங்களையும் போக்கக் கூடியதும் மிகவும் மங்களகர மானதும் ஆகும்.

अपमृत्युहरं नृणां आयुरारोग्यवृद्धिदः ।
तत्र गत्वा तपः कुर्वन् सद्यस्सिद्धिमवाप्स्यसि ॥

அந்த க்ஷேத்திரம் அபமிருத்யுவை நீக்கும். மானிடவரின் ஆயுஸ், ஆரோக்யம் முதலியவற்றையும் அதிகமாக்கும். ஆகையாலே அந்த க்ஷேத்திரத்திற்குப்போய் நீ தவம் புரிந்தால் விரைவில் பல ஸித்தியைப் பெறுவாய்.

अहं तत्र गमिष्यामि त्वमागच्छ मया सह ॥

நான் அந்தத்தலத்திற்குப் போகப்போகிறேன். என்னோடு நீயும் வரக்கடவாய்.

इत्युक्तो मुनिना श्वेतो वसिष्ठेन महात्मना ।
तेन सार्धं ययौ शीघ्रं पलाशवनमुत्तमम् ॥

மஹாத்மாவான வசிஷ்ட முனிவரால் இவ்வண்ணம் நியமிக் கப்பட்ட சுவேத ராஜனும் அவரோடே கூட உத்தமமான பலாச வனக்ஷேத்திரத்திற்கு விரைந்து செல்லலானான்.

वसिष्ठो मुनिमुख्यश्च श्वेतोऽपि नृपसत्तमः ।
एकादशस्थानयुक्तः पलाशवनमेत्य तौ ॥
स्नात्वा कवेरकन्यायां नतौ देवं पृथक् पृथक् ।

முனிவர்களில் தலைவரான வசிஷ்ட முனிவரும், மன்னர்களில் சிறந்த சுவேதனும் பதினொரு திவ்ய தேசங்களையுடைத்தான பலாசவன க்ஷேத்திரத்தை அடைந்தனர். அடைந்தபின்னர் திருக்காவிரியில் நீராடி அங்கங்கே கோயில் கொண்டெழுந் தருளி இருக்கும் எல்லா எம்பெருமான்களையும் ஸேவித்து நின்றனர்.

तत्रत्या मुनयः सर्वे वशिष्ठागमनं महत् ॥
श्रुत्वा प्रहृष्टमनसः प्रत्युद्गम्य मुनिं तदा ।
नीत्वाश्रमं महात्मानः पूजयामासुरादरात ॥

அப்பலாசவனத்தில் வாழும் முனிவர்கள் அனைவரும் வசிஷ்ட மாமுனியின் நல்வரவைக்கேட்டு மனமகிழ்வடைந்தவர்களாய் அவரை எதிர் கொண்டழைத்துவந்து தத்தம் ஆசிரமங்களில் ஆதரத்தோடு பூஜிக்கலானுர்கள்.

विष्टरासनपाद्यार्घ्यैः फलमूलादिभिर्मुनिम् ।
श्वेतं च पूजयामासुः सूर्यवंशविवर्धनम् ॥

தர்பாஸனம், பாத்யம். அர்க்யம் முதலிய உபசாரங்களாலும், கந்தமூல பலங்களாலும் அம்மாமுனிவரைப்பூசித்து, அவரோடு கூட வந்தவனும் சூரிய வம்சத்தை வளரச் செய்பவனுமான சுவேதனையும் உபசரித்தனர். வருவிருந்தை உபசரிப்பதே திவ்விய தேசங்களில் வாழுமவர்கட்குப் பணியிறே.

एवं संपूजितौ नित्यं मुनिभिस्तत्र वासिभिः ।
कञ्चित्कालं चोषतुस्तौ श्रुत्वा तत्स्थलवैभवम् ॥

தினந்தோறும் இங்ஙனே அத்தல முனிவர்களால் உபசரிக்கப் பட்ட வசிஷ்டனும் சுவேதனும் அத்தலவைபவத்தைக் கேட்டுக்கொண்டு சிலநாள் அங்கேயே இனிது வசித்து வந்தனர்.

ततः कालान्तरे तत्र वसिष्ठो मुनिपुङ्गवः ।
आहूय च मुनीन् सर्वान् प्रोवाच वचनं नृप ॥

ஓ! வஸு மன்னவனே! சிலகாலம் இப்படியே சென்றபின் ஒரு சமயம் முனிசிரேஷ்டரான வசிஷ்டர் எல்லா முனிவர்களையும் அழைத்து மேல்வருமாறு கூறினர்.

श्रुताश्चावहिता यूयं मुनयो ब्रह्मवित्तमाः ।
अयमिक्ष्वाकुदायादः श्रेष्ठस्सर्वधनुष्मताम् ॥

வாரீர்! தவ முனிவர்களே! நீங்கள் எல்லாவேதங்களையும் கசடறக் கற்றறிந்தவர்களாயும், அயர்வின்றி தத்தம் தவ நெறியில் நிலை நின்றவர்களாயும், பரம்பொருளான ஸ்ரீ மந்நாராயணனை உள்ளபடி உணர்ந்தவர்களாகவும் விளங்குகிறீர்கள். சுவேதனென்றும் இவ்வரசன் இக்ஷ்வாகு குலத்திலுதித்தவன். தனுர்வித்தையைக் கற்றறிந்தவர்களில் தேர்ந்தவன்.

दुन्दुमारसुतः श्रीमान् वशी लोकसुहृत्तमः ।
विहितो नृपतेरस्य मृत्युर्लोकभयङ्करः ॥
येन मृत्युं जयत्यत्र तद्वदन्तु मुनीश्वराः ॥

துந்துமாரனின் குமாரன். இவன் நற்செல்வம்படைத்தவன்; ஐம்புலன்களையும் அடக்கியவன்; உலகத்தின் நன்மையையே கருதும் நல்ல மனமுடையவன். உலகத்தாரை நடுங்கப் பண்ணும் மரணம் இவனுக்கு அகாலத்தில் ஏற்படப்போவதாக இருக்கிறது. இவ்வகால மரணத்திலிருந்து இவன் தப்பிப் பிழைக்கும் உபாயத்தை நீங்கள் ஆராய்ந்து சொல்லுங்கள்.

अगस्त्य :—

वसिष्ठस्य वचः श्रुत्वा मुनयः पुण्यतत्पराः ।
ऊचुश्च वचनं प्रीता राज्ञो मृत्युहरं नृप ॥

"ஓ! அரசனே! இவ்வண்ணம் கூறிய வசிஷ்டரின் மொழியைக்கேட்டு மனமுவந்தவர்களாய், புண்ணியகாரியங்களில் ஒருமித்த மனங்கொண்ட அம்முனிவர்கள் சுவேத மன்னனின் அகால மரணத்தைப்போக்கடிக்கும் உபாய விசேஷத்தைக் கூறினார்கள்" என்று அகஸ்திய முனிவர் வஸு மன்னவனைப் பார்த்துக் கூறினார்.

मुनयः —

अस्य राज्ञो महाभाग मन्त्रं मृत्युञ्जयं परं ।
उपादिश मुनिश्रेष्ठ ततो मृत्युं विजेष्यते ॥

வாரீர்! மஹாவைபவமுடைய முனிவர் தலைவா! சுவேத னென்னும் இவ்வரசனுக்கு மிகவும் சிறந்த ம்ருத்யுஞ்ஜய மஹா மந்திரத்தை உபதேசிக்கக் கடவீர். அம்மகாமந்திரத்தை ஜபிப்பதால் இவன் அகால மிருத்யுவை வெல்லக்கடவன், என்று முனிவர்கள் வசிஷ்டரை நோக்கிக்கூறினார்கள்.

अगस्त्य —

मुनीनां वचनं श्रुत्वा वसिष्ठो वाक्यमब्रवीत् ।
श्वेतागच्छ नरश्रेष्ठ! स्नानं कुरु यथाविधि ॥
गृहाण मन्त्रराजं तु मृत्युञ्जयमनुत्तमम् ॥

முனிவர்களின் வார்த்தையைக் கேட்ட வசிஷ்ட மாமுனிவரும் மனித சிரேஷ்டனான சுவேதனைக்குறித்துக் கூறலானார். ஓ! சுவேதனே! இந்தத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்னானம் செய்யக் கடவாய். பிறகு என்னிடமிருந்து அத்யத்புதமான மிருத்யுஞ் ஜய மஹாமந்திரத்தை உபதேசமூலமாகப் பெறுவாய்.'

श्रुत्वा तस्य मुनेर्वाक्यं स्नात्वा तीर्थे नृपोत्तमः ।
परिधाय नवं वस्त्रं वसिष्ठपुरतः स्थितः ॥

வசிஷ்ட முனிவரின் வார்த்தையைக்கேட்ட பின்னர் அரச சிரேஷ்டனான சுவேதனும் பரம பாவனமான அந்ததீர்த்தத்தில் நீராடி, பரிசுத்தமான புதிய வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு மந்திரோபதேசம்பெற வசிஷ்ட முனிவரை நமஸ்கரித்து நின்றான்.

उपादिशन्मन्त्रमनुत्तमं मुनिः नृपस्य वैकर्तनवंशजस्य ।
मृत्युञ्जयं पापहरं पवित्रं सर्वस्य लोकस्य हिते निविष्टः ॥

உலகத்தாரின் நன்மையில் ஒருப்பட்ட சிந்தனையை உடைய அவ்வசிஷ்ட முனிவரும் வெங்கதிரோன் குலத்திற்கோர் ஒளி விளக்காய்த் தோன்றின அம்மன்னவனுக்குப் பாபங்களைப் போக்கிப் புண்ணியத்தைத் தரவல்லதான மிகவும் சிறந்த மிருத்யுஞ்ஜயமஹாமந்திரத்தை முறைப்படி உபதேசித்து அருளினர்.

गृहीत्वा मन्त्रराजं तु श्वेतो राजन् नृपोत्तमः ।
नमस्कृत्य मुनिं तत्र वचनं चेदमब्रवीत् ॥
कुत्रसिद्धिर्महाभाग मम शीघ्रं भविष्यति ।
सद्यः सिद्धिकरं ब्रूहि क्षेत्रमत्यद्भुतं महत् ॥

ஓ! வஸு மன்னனே! இவ்வாறு மஹாமந்திரத்தைப் பெற்றுக் கொண்ட அரசர் தலைவனான அந்தச் சுவேத மன்னனும் அம் மாமுனிவரை நமஸ்கரித்து "எந்த க்ஷேத்திரத்தில் இம்மஹா மந்திரத்தை ஜபித்தால் விரைவில் பலஸித்தி ஏற்படுமோ, அந்த ஸ்தல விசேஷத்தைக் கூறியருளவேணும்" என்று பிரார்த்தித்தான்.

इति नृपवचनं निशम्य हृष्टो मुनिरवदत्करुणाद्र्र चित्तवृत्तिः ।
सकलदुरितजालनाशहेतुं सुरपतिसेवितमाश्रमं व्रजेति ॥

அரசனின் வேண்டுகோளைக்கேட்டு மனமுவந்து கருணை நிரம்பிய உள்ளங் கொண்ட அம் மாமுனிவர், ஸமஸ்த பாபங்களையும் அறவே நீக்கும் தன்மையுடையதும் தேவேந்திரனால் ஸேவிக்கப்படுவதுமான தவமுனிவர்களில் சிறந்த மருத்தருடைய ஆசிரமத்திற்கு விரைந்து செல்லக் கடவாய்' என்றார்.

मरुत्तस्याश्रमपदं वर्तते पुण्यमद्भुतम् ।
तडागस्येशकोणे तु भगवत्सन्निधौ महत् ॥
तत्रास्ते भगवान् विष्णुः मधुसूदन संज्ञितः ।
तडाकस्य परे भागे हरिः पूर्वमुखः स्थितः ॥

அந்த ஆசிரமம் இப் பலாசவனத்தின் ஒருபுறத்தில் மிகப்பெரிய புஷ்கரிணியின் வடகிழக்கில் அமைந்திருக்கிறது. ஸ்ரீநிவாஸன் ஸன்னிதிக்கு அருகில் புண்ணியத்தைத்தரக் கூடியதாயும், வியக்கத்தக்தாயும் அந்த ஆசிரமம் விளங்குகிறது. அங்கு தாமரைக் குளத்தில் மேல்பாகத்தில் மதுஸூதனன் என்னும் திருநாமத்தையுடைய ஸ்ரீமந் நாராயணனுன அண்ணன் பெருமாள் கிழக்கே திருமுக மண்டலமாய் எழுந்தருளி இருக்கிறுர்.

तत्र गच्छ मरुत्तेन सहोषित्वा नृपोत्तम ! ।
मन्त्रसिद्धिमवाप्याशु सद्यो मृत्युं तु जेष्यसि ॥

வாராய்! அரசர்களில் சிறந்த சுவேத மன்னனே! அங்கே போய் மருத்தரோடு இருந்துகொண்டு இம்மஹா மந்திரத்தை ஜபித்து விரைவில் ஸித்தியைப்பெற்று மிருத்யுவை வெல்லக் கடவாய்' என்று வசிஷ்டர் சுவேதனைப் பார்த்துக் கூறினுர்.

ततो मरुत्ताश्रममादरेण गत्वानृपो बुद्धिमतां वरिष्ठः ।
जप्त्वा स मन्त्रं हरिसन्निधौ स्वयं मासेन मृत्युं जितवान् नृपोत्तम ॥

ஓ! வஸு மன்னவனே! அறிவில் சிறந்த அச் சுவேத ராஜனும் குலகுருவான வசிஷ்ட முனிவரிட்ட கட்டளையை சிரமேற் கொண்டு மருத்தரின் ஆசிரமத்திற்குச் சென்று, அங்கு ஸ்ரீநிவாஸனின் ஸன்னிதியில் ஆதரத்தோடு ஒருமாத காலம் அம்மகாமந்திரத்தை ஜபித்து வெகுசீக்கிரத்தில் பலஸித்தியைப் பெற்றனன், என்று அகஸ்தியர் கூறினுர்.

ஸ்ரீபலாசவன மாஹாத்மியத்தில் பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினொருவது அத்தியாயம்

திருவெள்ளக்குள வைபவம்.

वसुः —

मरुत्तस्याश्रमे राजा जितवान् मृत्युमात्मनः ।
कथं तद्वद तत्त्वेन श्रोतुमिच्छाम्यहं मुने ॥

வாரீர் முனிவரே ! சுவேதனென்னும் அரசன் மருத்தருடைய ஆசிரமத்தில் இருந்துகொண்டு மிருத்யுஞ்ஜய மஹா மந்திரத்தை ஜபித்து ஸித்திபெற்று அபமிருத்யுவை வென்ற விருத்தாந்தத்தை விவரமாகக் கூறக்கடவீர்' என்று வஸுமன்னன் அகஸ்திய முனிவரை வேண்டினான்.

अगस्त्यः —

वसिष्ठेनाभ्यनुज्ञातो गृहीत्वा मन्त्रमुत्तमम् ।
श्वेतो राजन्! मुनिश्रेष्ठ मरुत्तस्याश्रमं ययौ ॥

வசிஷ்டரிடமிருந்து மந்திரோபதேசம் பெற்று விடைபெற்றுக் கொண்ட சுவேத மன்னன் முனிவர்களுள் சிறந்த மருத்தரின் ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்' என்று அகஸ்திய முனிவர் கூறினார்.

गत्वाश्रमं महापुण्यं मरुत्तं प्रणनाम सः ।
दृष्ट्वातु नृपतिं श्रीमान् मुनिः प्रणतवत्सलः ॥
सन्तुष्टहृदयो भूत्वा वाक्यमेतदुवाच ह ।
इक्ष्वाकूणां कुलेजातं जानामि त्वामहं नृप ! ॥

மிகவும் பரிசுத்தமான ஆசிரமத்தையடைந்து மருத்தரை நமஸ்கரித்தான். சரணாகதரிடம் மிக்க அன்பு பூண்ட அந்த மருத்தரும் சுவேத ராஜனைப் பார்த்து மனமுவந்து மேல் வருமாறு இன்சொல்லைக் கூறினார். ஓ! சுவேத ராஜனே இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த உன்னை நானறிவேன்.

तवागमनकार्यं च सर्वं जानामि तत्त्वतः ।

इदमर्घ्यमिदं पाद्यं गृहाण नृपसत्तम ॥

நீ வந்த காரியத்தையும் உள்ளபடி நானறிவேன். நற்குண முடைய அரசனே! அர்க்யம், பாத்யம் முதலிய இவ்வுபசாரங் களைப் பெற்றுக்கொள்.

श्वेतः —

मरुत्तस्य मुनेर्वाक्यं श्रुत्वा राजा प्रहृष्टधीः ।

भवद्दर्शनमात्रेण सञ्जातं सर्वमेव मे ॥

மருத்த முனிவரின் ஆதரமொழியைக் கேட்டு மனத்தில் சந் தோஷமடைந்த சுவேத ராஜன் உம்மை ஸேவித்ததினாலேயே நான் எல்லா உபசாரங்களையும் பெற்றவனானேன்.

अत्र मृत्युं तु जेष्यामि कृपया तव सुव्रत ।

वसिष्ठस्य मुनेर्वाक्यं श्रुत्वा चात्राहमागतः ॥

நல்ல விரதத்தைக்கொண்ட முனிவரே! வசிஷ்ட மாமுனிவரின் உத்தரவின்படி அடியேன் இங்கு வந்து சேர்ந்தேன். உம் முடைய கருணையினாலேயே இங்கே நான் மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.

तदर्थं क्रियतां यत्नो भवता मुनिसत्तम ।

श्रुत्वैव तस्य वचनं मरुत्तो मुनिपुङ्गवः ॥

அற்காக என்ன செய்யவேண்டுமோ அதைக் கிருபையோடு செய்து வைக்கக்கடவீர்.' என்று கூற, அதைக்கேட்டு முனி ச்ரேஷ்டரான மருத்தர் கூறலானார்.

मदाश्रमपुरोभागे वर्तते लोकनायकः ।

मधुसूदनसंज्ञो वै अपमृत्युहरो हरिः ॥

तत्सन्निधिमवाप्य त्वं तपः कुरु महामते ।

என்னுடைய ஆசிரமத்திற்கு எதிரில் லோகநாயகனுன ஸ்ரீமந் நாராயணன் அபமிருத்யுவைப் போக்க வல்லனுய் மதுஸூதனன் என்ற திருநாமத்தோடுவிளங்குகிருன். மஹாபுத்திமானுகிய நீ அவனது ஸன்னிதியை அடைந்து தவம் செய்யக் கடவாய்.

इति तस्य मुनेर्वाक्यं निशम्य नृपपुङ्गवः ॥
भगवत्सन्निधिं गत्वा स्नात्वा तीर्थे मनोहरे ।
नमस्कृत्य दयाशीलं हरिं त्रिभुवनेश्वरम् ॥
तडाकदक्षिणे पार्श्वे बिल्वमूले व्यवस्थितः ।
उत्तराभिमुखो भूत्वाऽजपन्मन्त्रमनुत्तमम् ॥

இவ்வாறு மருத்த முனிவரின் வார்த்தையைக் கேட்டு அரசர்களுள் சிறந்த சுவேத ராஜன், எம்பெருமான் (அண்ணன் பெருமாள்) ஸன்னிதியை அடைந்து அதிரமணீயமான தாமரைக்குளத்தில் நீராடி, மூவுலகுக்கும் தனிப்பெருந் தெய்வமாயும் கருணைக் கடலாயுமிருக்கின்ற ஸ்ரீநிவாஸனை ஸேவித்து புண்ணிய தீர்த்தமான அத்தாமரைக் குளத்தின் தென்பாகத்தில் பில்வ மரத்தடியில் வடதிசை நோக்கி இருந்துகொண்டு உத்தமமான மிருத்யுஞ்ஜய மஹாமந்திரத்தை ஜபிக்கலானுன்.

आश्वयुक् शुक्लपक्षस्य दशम्यां तु नृपोत्तमः ।
प्रत्युत्थायाथ नियमं गृहीत्वा बिल्वमूलके ॥
अद्यप्रभृति देवेश हरेऽहं मधुसूदन ।
मासमात्रं निराहारः स्थित्वा बिल्वस्य मूलके ॥
मृत्युञ्जयमहामन्त्रं जपामि मधुसूदन ।
तन्न्यूनमधिकं वापि निर्विघ्नं कुरु मे प्रभो ॥

ஓ! வஸு ராஜனே! சுவேத னென்னும் அவ்வரசன் ஐப்பசி மாதம் சுக்லபக்ஷ தசமியன்று பிரா்ம்ம முஹூர்த்தத்தில் எழுந்

திருந்து நித்ய கர்மாக்களை அனுஷ்டித்த பிறகு, ஜபத்திற்கு அங்கமான நியமங்களோடு பில்வ மரத்தடியில் ஸங்கல்பம் செய்து கொண்டான். ஓ! தேவாதி தேவனே! மது ஸூதா! திருமாலே! இன்றுமுதல் ஒரு மாதகாலம் இம்மரத்தினடியில் நிராஹாரனாய் நின்று கொண்டு மிருத்யுஞ்ஜய மஹா மந்திரத்தை ஜபிக்கிறேன். இதனிடையே ஒருவிதமான விக்னமும் வராமல் இவ்விரதத்தை ரக்ஷித்துக் குறைவு நிறைவுகளை சமமாக்கித்தலைக் கட்டித்தர வேண்டும் என்று ஸ்ரீநிவாஸனைப் பிரார்த்தித்தான்.

इत्येवं निश्चयं कृत्वा देवदेवस्य सन्निधौ ।
तपश्चकार परमं अपमृत्युजिगीषया ॥

இவ்வண்ணம் உறுதியாக இருந்து கொண்டு ஸ்ரீநிவாஸனை அண்ணன் பெருமாள் ஸன்னிதியில் அபமிருத்யுவை ஜயிக்க விரும்பி அரும் பெருந்தவம் புரியலானான்.

कृत्तिकाशुक्लपक्षस्य यावदेकादशी भवेत् ।
तावदेव जिताहारो जितक्रोधो जितेन्द्रियः ॥
शुष्ककाष्ठइवारण्ये पादेनैकेन तस्थिवान् ।
दृष्ट्वा तस्य तपः क्रूरं भगवान् मधुसूदनः ॥
दुन्दुमारात्मजं देवो रक्षितुं स्वमनो दधे ।

இப்படி கார்த்திகை மாதம் சுக்லபக்ஷ ஏகாதசிவரை ஆகாரத்தை விட்டு, சினத்தையும் ஒழித்து, இந்திரியங்களையும் அடக்கி ஒரு காலால் நின்று கொண்டு புரிந்த கடுந்தவத்தினால் உலர்ந்த மரக்கட்டைபோல் மெலிந்த சரீரத்தை உடையவனாக ஆனான். துந்து மாரனின் குமாரனான சுவேதனின் கடுந்தவத்தைக் கண்டு மனமிரங்கி மதுஸூதனன் அவனைக் காப்பாற்ற திருவுள்ளங் கொண்டான்.

द्वादश्यां प्रातरुत्थाय श्वेतो नृपतिनन्दनः ॥

स्नात्वा सम्यग्विधानेन सन्ध्यावन्दनपूर्विकाः ।
क्रियाः कृत्वा महाभागः सम्यग्घुतहुताशनः ॥
बिल्वमूले पुनर्गत्वा ध्यातुं समुपचक्रमे ।

கார்த்திகைமாதம் சுக்லபக்ஷ த்வாதசியன்று பிராம்ம முஹூர்த்தத்தில் நியமங்களோடு ஸ்நானம் செய்து ஸன்னிதியில் ஜப ஹோமங்களைச் செய்து நித்ய கர்மாக்களை முடித்துக்கொண்டு, அன்றும் வழக்கம்போல் பில்வமரத்தடியில் நின்று மந்திரத்தை ஜபித்துக் கொண்டு எம்பெருமானை தியானம் செய்யத் தொடங்கினன்.

ध्यायतस्तस्य पुरतो देवदुन्दुभि निस्स्वनैः ॥
शङ्खभेरीमृदङ्गानां तुमुलं समजायत ।
ततः प्रादुरभूत्तेजः कोटिसूर्य समप्रभम् ॥

சுவேத மன்னன் இவ்வாறு தியானித்துக் கொண்டிருக்கும் போது அவன் முன்பு துந்துபி, சங்கு, பேரிகை, மிருதங்கம் முதலிய வாத்யங்கள் முழங்கின. பிறகு கோடி சூரியன் உதித்தாற்போன்று பேரொளியோடு மிக அழகான சோதி மண்டலம் எதிரில் தோன்றியது.

ततः साक्षाज्जगन्नाथो वशीकृतजगत्त्रयः ।
स्तूयमानश्च गन्धर्वैः सिद्धैश्च सहचारणैः ॥
योगिभिस्सनकाद्यैश्च देवैरिन्द्रपुरोगमैः ।
मुनिभिर्वालखिल्यैश्च नारदाद्यैश्च वैष्णवैः ॥
सेव्यमानो मुनिश्रेष्ठैः प्रादुरासीत् हरिस्तदा ।

அப்பெருஞ்சோதி மண்டலத்திற்குள் கந்தருவர் சாரண சித்தர்கள் கானரூபமாகத்துதி செய்ய, ஸநகாதி யோகிகள், இந்திராதி தேவர்கள், வாலகில்ய மகரிஷிகள், ஸ்ரீவைஷ்ணவர்களான நாரதாதி முனிவர்கள் சூழ்ந்திருந் தேத்திப் பல்லாண்டு

பாட, விலக்ஷண திவ்யமங்களயுக்தனுய் பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாளு மவனுய் 'ஸர்வஸ்யவசீ' 'ஸர்வஸ்யேசாநঃ, ஸர்வஸ்யாதிபதிঃ என்கிறபடி எல்லாவற்றையும் நியமிக்கிறவனுய், ஸர்வ ஜகத் திற்கும் நாயகனுய், ஸ்ரிய: பதியான ஸர்வேசுவரன் 'குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோரு' என்கிறபடி பிரத்யக்ஷமானுன்.

ध्यानारूढं सुसंप्रेक्ष्य ह्युवाच मधुसूदनः ॥

சுவேதனின் முன்பு தோன்றிய ஸ்ரீமந் நாராயணன் தியான யோகத்திலிருக்கும் சுவேதனைப் பார்த்து மேல் வருமாறு திருவாய் மலர்ந்தருளினுன்.

श्रीभगवानुवाच :—

श्वेत! वत्स! चिरंजीविन्! जितोमृत्युस्त्वयाऽधुना ।
मृत्युञ्जयेन मन्त्रेण प्रीतोऽस्मि तव सुव्रत ॥

குழந்தாய்! சுவேதனே! சிரஞ்ஜீவியானவனே! நீ இப்போது மிருத்யுவை (மரணத்தை) ஜயித்தவனுகிருய். நல்ல விரதம் பூண்டவனே! நீ செய்த மிருத்யுஞ்ஜய மந்திர ஜபத்தினுல் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

दीर्घमायुः प्रदास्यामि कल्पान्तस्थायि ते नृप! ।
विनाशो न भवेत्तात मार्कण्डेयसमो भव ॥

ஓ! அரசனே! உனக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கிறேன். அதனிடையில் உனக்கு மரணம் ஏற்படாது. நீ மார்க்கண்டேய னேடு ஒத்தவனுக இருக்கக் கடவாய்.

अमुं मृत्युञ्जयं मन्त्रं यो वा कोवाऽपि भूतले ।
जपेदष्टसहस्रं च तस्य मृत्युभयं नतु ॥

இந்த மிருத்யுஞ்ஜய மந்திரத்தை எவனெருவன் இந்த திவ்ய தேசத்தில் எண்ணுயிரம் முறை ஜபிக்கிருனே அவனுக்கு மிருத்யு பயமே உண்டாகாது.

न विद्यते पुनर्जन्म मोक्षस्तस्य करे स्थितः ।
इत्युक्त्वा नृपतिं भूयो हरिर्वचनमब्रवीत् ॥
वरं वरय राजेन्द्र! यत्ते मनसि रोचते ।
सन्तुष्टस्तपसाऽहं ते ह्यात्मानं च ददाम्यहम् ॥

என்னை தியானித்துக் கொண்டு இம்மந்திரத்தை ஜபிக்கிறவனுக்கு மறு பிறப்பு இல்லை. மோக்ஷம் அவனிட்டவழக்காக இருக்கும்.' என்று மொழிந்தருளி, மீண்டும் அரசனைப் பார்த்து, 'ஓ! அரசே! நீ புரிந்த கடுந்தவத்தினால் நான் மகிழ்ந்தேன். நீ விரும்பும் வரத்தை வேண்டிப் பெற்றுக்கொள். எவன் என்னை மனப்பூர்வமாக விரும்புகிறானோ அவனுக்கு 'य आत्मा बलदा' यमेवैषवृणुते तेन लभ्यः तस्यैष आत्मा विवृणुते तनूँस्वां' என்கிறபடியே என்னுடைய ஆதியஞ்சோதியுருவையும் கொடுப்பவனாவேன்' என்றார்.

अगस्त्य :—

इत्युक्तो हरिणा राजन् सूर्यवंशविवर्धनः ।
प्रोवाच वचनं धीमान् नारायणमना नृपः ॥

அகத்திய முனிவர் வஸுமன்னனைப் பார்த்துக் கூறினார்:- வஸுமன்னவனே! இவ்வாறு எம்பெருமான் வரம் தருவதாகக் கூறினவாறே, சூரியவம்சத்தை வளரச்செய்யும் பெரும் புகழ் படைத்தவனும் சிறந்த புத்திமானுமாகிய சுவேதன் ஸ்ரீ நிவாஸனிடம் மிக்க அன்பு கொண்டவனாய் விண்ணப்பிக்கலானான்.

श्वेत :—

अद्य प्रभृति देवेश तीर्थस्यास्य जगत्पते ।
श्री श्वेतपुष्करमितित्वाख्या भवतु शाश्वती ॥

'தேவாதி தேவனே! ஸகல லோகத்திற்கும் ரக்ஷகனான ஸ்ரீ நிவாஸனே! அடியேன் கடுந்தவம் புரிந்த இந்தப் புஷ்

கரிணிக்கு இன்று முதல் அடியேனுடைய பெயரை இட்டே சுவேத புஷ்கரிணி என்ற திரு நாமமுண்டாகவேணும்.

तीर्थेऽस्मिन् जपतां पुंसां नास्ति मृत्युकृतं भयम् ।

இந்த தீர்த்தத்தில் மிருத்யுஞ்ஜய மஹாமந்திரத்தை ஜபிப்பவனுக்கு மிருத்யு பயம் ஏற்படாது என்று தேவரீர் வரம் தந்தருள வேண்டும்.

इदं मे चरितं पुण्यं तीर्थस्य चरितं च यत् ॥
पठतां शृण्वतां चैव सर्वभाग्यकरं परम् ।
स्वर्गकामो लभेत्स्वर्गं धनकामो लभेत् धनम् ॥

அடியேனுடைய தவ வரலாற்றேடு கூடிய இந்த சுவேத புஷ்கரிணியின் பரம பாவநமான மஹிமை, இம்மாஹாத்மியத்தை பக்தியோடு வாசிக்கிற வர்களுக்கும், கேழ்க்கிறவர்களுக்கும் ஸகல விதமான ஸௌபாக்யத்தையும் கொடுக்க வேண்டும் என்று தேவரீர் கிருபை செய்தருள வேண்டும். சுவர்க்கத்தை விரும்புகிறவன் சுவர்க்கத்தையும், செல்வத்தை விரும்புகிறவன் செல்வத்தையும் பெறவேண்டும்.

निष्कामश्चलभेन्मोक्षं कन्या विन्दति सत्पतिम् ।
ब्रम्हचारी लभेन्कन्यां वन्ध्या पुत्रवती भवेत् ॥

நிலையற்ற எப்பயனையும் விரும்பாமல் தேவரீருடைய முகோல்லாஸத்தையே விரும்புகிறவன் மோக்ஷத்தையும், கன்னிகை நல்ல மணாளனையும், பிரம்மசாரி நற்குணமுள்ள கன்னிகையைப் பத்தினியாகவும், மலடி ஸத்புத்ர பாக்யத்தையும் பெற வேண்டும். இவ்வாறான வரங்களை தேவரீர் தந்தருள வேணும்.

इतिराज्ञो वचः श्रुत्वा भगवान् मधुसूदनः ।
त्वत्प्रार्थितमिदं सर्वं तथाऽस्तु नृपपुङ्गव ॥

सुखमास्व मया सार्धं अत्रैव मम सन्निधौ ।
इत्युक्त्वान्तर्दधे विष्णुः अप्रमेयविचेष्टितः ॥

இவ்வாறு சுவேதனின் வேண்டு கோளைக் கேட்டு மதுஸூதனனான ஸ்ரீமந் நாராயணன் ஓ! அரசனே! நீ விரும்பியதெல்லாம் அப்படியே ஆகக்கடவது என்று வரம் தந்தருளினார். மேலும், ஓ! சுவேத மன்னனே! நீ இங்கேயே என்னுடைய ஸன்னிதியில் என்னோடு கூட சுகமாக வசித்து வரக் கடவாய்' என்று கிருபை பண்ணியருளி திவ்விய லீலா சேஷ்டிதங்களையுடைய ஸ்ரீநிவாஸன் அந்தர்தானமானார்.

इन्द्रादयस्तदा देवाः सिद्धाश्च परमर्षयः ।
स्वं स्वं धाम ययुः शीघ्रं कथयन्तो मिथः कथाः ॥

एवं श्वेततडाकस्य माहात्म्यं नृपशेखर ।
यथाशक्ति समाख्यातं सर्वपापभयापहम् ॥

அப்போது இந்திரன் முதலான தேவர்களும், சித்த சாரணர்களும், மஹர்ஷிகளும், ஒருவருக் கொருவர் எம்பெருமானுடைய இந்த லீலா சேஷ்டிதங்களைக் கூறிக் கொண்டு தத்தம் இருப்பிடம் சென்றனர், ஓ! வஸு மன்னவனே! ஸகல பாபங்களையும், பயத்தையும் போக்கவல்ல இந்தத் திருவெள்ளக்குள மஹாத்மியத்தை என்னால் இயன்ற அளவு உனக்குக் கூறினேன் என்று அகஸ்திய முனிவர் வஸு மன்னவனைப் பார்த்துக் கூறினார்.

पलाशवनवासाय पङ्कजाक्षाय शार्ङ्गिणे ।
श्वेताभीष्टप्रसादाय वेङ्कटेशाय मङ्गळम् ॥

திருமங்கை யாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

நான்காம் பத்து— —ஏழாம் திருமொழி

* கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்
நண்ணார் முனை வென்றி கொள்வார் மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள் சூழ் திரு வெள்ளக் குளத்துள்
அண்ணா; அடியேனிடரைக் களையாயே. (1)

கொந்தார் துளவ மலர் கொண்டணிவானே
நந்தாத பெரும்புகழ் வேதியர் நாங்கூர்.
செந்தாமரை நீர்த் திரு வெள்ளக் குளத்துள்
எந்தாய், அடியேனிடரைக் களையாயே. (2)

குன்றால் குளிர்மாரி தடுத்து கந்தானே
நன்றாய பெரும்புகழ் வேதியர் நாங்கூர்.
சென்றார் வணங்கும் திரு வெள்ளக் குளத்துள்
நின்றாய், நெடியாயடியே னிடர் நீக்கே. (3)

கானார் கரி கொம் பொசித்த களிறே!
நானாவகை நல்லவர் மன்னிய நாங்கூர்.
தேனார் பொழில் சூழ் திரு வெள்ளக் குளத்துள்
ஆனாய், அடியேனுக் கருள் புரியாயே. (4)

* வேடார் திருவேங்கடம் மேய விளக்கே!
நாடார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்
சேடார் பொழில் சூழ் திரு வெள்ளக் குளத்தாய்
பாடா வருவேன் வினையாயின பாற்றே. (5)

கல்லால் கடலை அணைகட்டி உகந்தாய்
நல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்
செல்வா! திரு வெள்ளக் குளத்துறைவானே
எல்லா விடரும் கெடுமாறருளாயே. (6)

கோலால் நிரை மேய்த்த எங்கோவலர் கோவே
நாலாகிய வேதியர் மன்னிய நாங்கூர்.
சேலார் வயல் சூழ் திரு வெள்ளக் குளத்துள்
மாலே! என வல்வினை தீர்த்தருளாயே. (7)

வாராக மதாகி இம்மண்ணை இடந்தாய்
நாராயணனே! நல்லவேதியர் நாங்கூர்.
சீரார் பொழில் சூழ் திரு வெள்ளக் குளத்துள்
ஆராவமுதே! அடியேற்கருளாயே. (8)

* பூவார் திருமாமகள் புல்கிய மார்பா!
நாவார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்.
தேவா திரு வெள்ளக் குளத்துறைவானே
ஆவா! வடியானிவ னென்றருளாயே. (9)

* நல்லன்புடை வேதியர் மன்னிய நாங்கூர்
செல்வன் திரு வெள்ளக் குளத்துறைவானை
கல்லின் மலிதோள் கலியன் சொன்ன மாலை
வல்ல ரென வல்லவர் வானவர் தாமே. (10)

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்.

லக்ஷ்மி விஜயம் பிரஸ், 2, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.